**SENGUNTHAR**

# Daily News

13-05-2025/SEC/DN/170




## பௌர்ணமியை முன்னிட்டு நுவலி தமிழ் மன்றம் நடத்திய கவியரங்கம் சிறப்பாக நடைபெற்றது.

நுவலி தமிழ் மன்றம் சார்பில் பௌர்ணமி கவியரங்கம் எதிர்பார்த்தது - போலவே மிக சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் தமிழ் மன்றத்தை சேர்ந்த மாணவர்கள் உற்சாகத்துடன் கலந்துகொண்டு, தங்களது சொந்தக் கவிதைகளை உரைநடை, நரம்பணை மற்றும் இலக்கியத் தொனியில் அரங்கேற்றம் செய்தனர். மாணவர்கள் தங்களது மொழிப்பழக்கம் மற்றும் கவிதைத் திறமைகளை வெளிப்படுத்தி, நிகழ்ச்சியில் பங்கேற்ற அனைவரிடமும் பாராட்டைப் பெற்றனர்.




**செம்மொழி நாள் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு மாநில அளவிலான போட்டிகளில் செங்குந்தர் பொறியியல் கல்லூரி மாணவர்கள் சிறப்பாக பங்கேற்பு**

2025 ஆம் ஆண்டு முதல் ஜூன் திங்கள் மூன்றாம் நாளினை செம்மொழி நாள் மற்றும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் விழா தமிழ் வளர்ச்சி துறை மூலமாக ஆண்டு தோறும் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகின்றது இவ்விழாவை முன்னிட்டு மாநில அளவிலான கட்டுரை போட்டி மற்றும் பேச்சுப்போட்டி நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் மகளிர் கலை அறிவியல் கல்லூரியில் 10 5 2025 சனிக்கிழமை அன்று நடைபெற்றது இப்போட்டியில் நம் கல்லூரியில் இருந்து மூன்று மாணவர்கள் கட்டுரைப்போட்டி மற்றும் பேச்சுப் போட்டியில் பங்கேற்று விழாவை சிறப்பித்து சான்றிதழ் மற்றும் பரிசு பெற்றுள்ளனர்.

மாணவர்கள் பெயர் பின்வருமாறு உள்ளது.

கே பிரிய தர்ஷன் - இரண்டாம் ஆண்டு மருத்துவ மின்னணுவியல் துறை.
மாணவி கிருத்திகா மூன்றாம்- ஆண்டு ஏ ஐ டி எஸ் துறை.
மாணவன் கோபிநாத்- முதலாம் ஆண்டு மின்னணுவியல் துறை

## நுவலிதமிழ்மன்றம் - தினம்ஒருதிருக்குறள்



குறள் 534
அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.
விளக்கம்
பயத்தினால் நடுங்குகிறவர்களுக்குத் தம்மைச் சுற்றிப் பாதுகாப்புக்கான அரண் கட்டப்பட்டிருந்தாலும் எந்தப் பயனுமில்லை. அதைப் போலவே என்னதான் உயர்ந்த நிலையில் இருந்தாலும் மறதி உடையவர்களுக்கு அந்த நிலையினால் எந்தப் பயனுமில்லை.

## இலக்கணக் குறிப்பறிதல்

### எதிர்மறைப் பெயரெச்சம்:

எதிர்மறைப் பொருளுடன் வரும் பெயரெச்சம்.
உதாரணம்:
வாழாத மனிதன்:
மனிதன் வாழவில்லை என்பதைச் சொல்லும் போது "வாழாத" என்பது எதிர்மறைப் பெயரெச்சம்.
எதிர்மறைப் பெயரெச்சம் என்பது, ஒரு வினை நிகழவில்லை என்பதைக் குறிக்கும் பெயரெச்சம். இது, ஒரு பெயர்ச்சொல்லைத் தொடங்கும் வினையாக இருக்கும். "வாழாத மனிதன்" என்ற சொற்றொடரில் "வாழாத" என்பது எதிர்மறைப் பெயரெச்சமாகும்.

## பிறமொழிக்கு இணையான தமிழ்ச் சொற்கள்

பிறமொழி: நகல் தமிழ்மொழி: போலி


SENGUNTHAR Shrine 2 Success கற்க கசடற
SENGUNTHAR ENGINEERING COLLEGE (AUTONOMOUS)
TIRUCHENGODE-637205,NAMAKKAL (Dt),TAMILNADU